தந்தை பெரியார் சாதித்தது என்ன?



உங்களுக்குத் தெரியுமா?

விலை : ரூ.2/-

உங்களுக்குத் தெரியுமா?

1. 1899ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற ஒரு நாடகத்தில் விளம்பரம் செய்யப்பட்ட ஒரு துண்டு நோட்டீசில் "பஞ்சமர்கட்கு இடம் இல்லை" என்று அச்சிட்டார்கள்.

   சென்னையிலே இந்த நிலை 90 ஆண்டுகட்கு முன்பு !

   இந்த நிலையை மாற்றியது தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

2. 1925-க்கு முன்பு தமிழ்நாட்டிற்கு காந்தியார் வந்த போதெல்லாம் மைலாப்பூரில் சீனுவாச அய்யங்கார் வீட்டுத் திண்ணையில் தான் உட்கார்ந்திருப்பார் - உள்ளே போகாமல்.

   1926-க்குப் பின்தான் அவர் வீட்டுக்கு உள்ளே சென்றார். காரணம் 1925 முதல் சுயமரியாதை இயக்கத்தினை பெரியார் ஆரம்பித்து பிரச்சாரம் செய்தார்.

   "மகாத்மா" காந்திக்கே இந்தக் கதி என்பது உங்களுக்குத் தெரியுமா?

3. 1933 அக்டோபரில் "குடி அரசி"ல் தந்தை பெரியாரால் எழுதப்பட்ட "இன்றைய ஆட்சிமுறை ஏன் ஒழியவேண்டும்?" என்ற கட்டுரையில் தீவிர பொதுவுடைமை வாடை வீசுகிறது என்று சொல்லப்பட்டு இ.பி.கோ. 124 ஏ பிரிவின்படி ராஜதுவேஷக் குற்றம் சுமத்தப்பட்டு, கட்டுரை ஆசிரியர் தந்தை பெரியார் அவர்களும், வெளியீட்டாளர் எஸ்.ஆர். கண்ணம்மாள் அவர்களும் (பெரியாரின் தங்கை) பிரிட்டிஷ் அரசாங் கத்தாரால் தண்டிக்கப்பட்டார்கள் என்ற செய்தி உங்களுக்குத் தெரியுமா?

4. 1960 வாக்கில் விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட 'சோதனைக் குழாய் குழந்தை' பற்றி 1938-லேயே கருத்துத் தெரிவித்தவர் தந்தை பெரியார் என்ற உண்மை உங்களுக்குத் தெரியுமா?

5. 1942ஆம் ஆண்டு கவர்னரும், வைஸ்ராயும் தமிழகத்தில் ஆட்சி அமைக்க வருமாறு இரண்டாவது முறையாக வேண்டியதும், அதை தந்தை பெரியார் ஏற்க மறுத்து, பதவியை துச்சமென உதறித் தள்ளினார் என்ற வரலாறும் உங்களுக்குத் தெரியுமா?

6. 1942-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவுக்கு வந்திருந்த திருவாங்கூர் மகாராணி சமஸ்கிருத வளர்ச்சிக்கு ரூ. 1லட்சம்

நன்கொடை தந்தபோது - தந்தை பெரியார் அதை எதிர்த்து போராடி - அந்தப் பணத்தை மாணவர் விடுதி வளர்ச்சிக்கு செலவிட ஏற்பாடு செய்தார் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

7. 1951-ல் தந்தை பெரியார் நடத்திய வகுப்புரிமைப் போரின் காரணமாகத்தான் இந்திய அரசியல் சட்டம் முதன் முதல் திருத்தப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியுமா?

8. பட்டுக்கோட்டை அழகிரி, நெடும்பலம் சாமியப்பா போன்றவர்கள் அடக்கம் செய்யப்பட்ட - தஞ்சை வடவாற்றுக் கரையில் உள்ள இடுகாட்டில் 'சூத்திரர்கள் இடம்' என்று தனியாக ஒரு கல் செதுக்கி வைக்கப்பட்டிருந்தது என்பதும் 1954-ல் தந்தை பெரியார் முயற்சியால் அது அகற்றப்பட்டது என்பதும் உங்களுக்குத் தெரியுமா?

9. தந்தை பெரியார் தலைமையில் வைக்கம் போராட்டம் நடந்த போது - போராட்ட வீரர்களுக்கு உணவு வழங்கியவர்கள் சீக்கியர்கள் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

10. குருகுல பிரச்சினை நடந்து கொண்டிருந்தபோது - பிறப்பில் ஏற்றத்தாழ்வு இல்லை என்று காங்கிரஸ் கமிட்டியில் தந்தை பெரியார் கொண்டு வந்த தீர்மானத்துக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தவர் ஆச்சாரியார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

11. ருசியாவிற்குச் செல்லுவதற்கு முன்பே இந்தியாவிலேயே முதன் முதலாக மார்க்ஸ் ஏங்கெல்ஸ் கம்யூனிஸ்ட் அறிக்கையை மொழிபெயர்த்துத் தமிழில் வெளியிட்டவர் தந்தை பெரியார் என்ற வரலாற்றுச் செய்தி உங்களுக்குத் தெரியுமா?

12. 1921-ல் நீதிக்கட்சி ஆட்சி வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை அமுல்படுத்தியபோது - பார்ப்பன அதிகாரிகளை 'பி' என்றும், பார்ப்பனரல்லாத அதிகாரிகளை 'என்.பி' என்றும் அரசு ஃபைல்களில் குறிப்பிட்டு - பார்ப்பனரல்லாதாரை இனம் கண்டு, வாய்ப்புகளைத் தந்தது என்பதும், அதன்காரணமாக பார்ப்பனர்கள் தங்கள் சாதிப்பட்டதை போட அஞ்சினர் என்பதும் உங்களுக்குத் தெரியுமா?

13. 1921ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி பெண்களுக்கு முதன்முதலாக ஓட்டுரிமை வழங்கியது நீதிக்கட்சி தான் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

14. வேலைவாய்ப்பில் மட்டுமின்றி, பதவி உயர்விலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று 1922ஆம்

ஆண்டிலேயே நீதிக்கட்சி ஆணை பிறப்பித்தது என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

15. 1922ஆம் ஆண்டு - நீதிக்கட்சி ஆட்சியில்தான் 'ஸ்டாப் செலக்ஷன் போர்டு' ஏற்படுத்தப்பட்டு உத்தியோக நியமனங்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டது. அதற்குமுன் அந்தந்த இலாகா மூலமாகவே - பார்ப்பனர்கள் ஏராளமான வேலைக்கு நியமிக்கப்பட்டு வந்தார்கள் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

16. 1936ஆம் ஆண்டு நீதிக்கட்சி இனாம்தாரர்கள் கொட்டத்தை அடக்க மசோதா கொண்டு வந்தபோது - அதை நாத்திகர் சட்டம் என்று கூறி பார்ப்பனர்கள் எதிர்த்தனர் என்பதும், கவர்னர் அந்த மசோதாவுக்கு ஒப்புதல் தரமறுத்தார் என்பதும் உங்களுக்குத் தெரியுமா ?

17. நீதிக்கட்சி ஆட்சிக்கு முன்பு வரை மருத்துவக் கல்லூரிப் பட்டப் படிப்பிற்கு சமஸ்கிருதம் தெரியவேண்டும் என்று இருந்தநிலை பற்றி உங்களுக்குத் தெரியுமா?

இதன் பொருள் என்ன ? பார்ப்பனர்கள் மட்டுமே டாக்டர்களாக வேண்டும் என்பதுதானே !

18. தேவதாசிகள் ஒழிப்பு மசோதா, விபச்சார ஒழிப்பு மசோதாக்களை கொண்டு வந்தது நீதிக்கட்சி ஆட்சிதான் என்பது உங்களுக்குத் தெரியுமா?

19. மறவர் சமூகத்தினர் அன்றாடம் காவல் நிலையத்துக்கு வந்து கையெழுத்திட வேண்டும் என்று குற்றப் பரம்பரை பட்டியலில் வைக்கப்பட்டிருந்த அவலத்தை ஒழித்தது நீதிக்கட்சிதான் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

20. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் பிரதிநிதியை-முதன் முதலாக அமைச்சர் பதவியிலமர்த்தியது நீதிக்கட்சி தான் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

21. ஆதித்திராவிடர் (பஞ்சமர்) பொதுத் தெருவிலும் சகலமான சாலைகளிலும் நடந்து போகலாம் என்று முதன் முதலில் அதற்கென்றே தனித்த ஆணையைப் பிறப்பித்தது நீதிக்கட்சி ஆட்சிதான் என்பது உங்களுக்குத் தெரியுமா?

22. தொழிற்சங்கத் தலைவராக இருந்த திரு.வி.க.வை நாடு கடத்த வேண்டும் என்று பிரிட்டிஷ் ஆட்சி வற்புறுத்தியபோது, அன்றைய நீதிக்கட்சி

அதை ஏற்க மறுத்ததோடு, திரு.வி.க வை நாடு கடத்தினால் பதவியை ராஜினாமா செய்வோம் என்று அறிவித்த வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

23. மயிலாப்பூர் கபாலீசுவரன் கோயில் கும்பாபிஷேகத்துக்கு, மற்ற எல்லோரையும் விட - 1916 ஆம் ஆண்டில் ரூ. 10,000 நன்கொடை வழங்கிய - நீதிக்கட்சித் தலைவர், தியாகராயருக்கு விழா மேடையில் உட்காரப் பார்ப்பனர்கள் அனுமதிக்கவில்லை! அதே நேரத்தில் தியாகராயரின் பார்ப்பன கிளர்க்குகளுக்குக் கூட அந்த உரிமை வழங்கப்பட்டிருந்தது!

    இந்த அவமானத்தைக் கண்டு கொதித்தெழுந்த தியாகராயர், பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பில் மிகத் தீவிரவாதியாக மாறினார் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

24. "நீதிக்கட்சித் தலைவர் - சர் பிட்டி தியாகராயர் சென்னை மாநகர மேயராக இருந்த காலத்தில்தான் முதன் முதலாக பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது என்ற வரலாற்று உண்மை உங்களுக்குத் தெரியுமா?

25. நீதிக்கட்சித் தலைவர்-சர் பிட்டி தியாகராயர் அவர்கள் சென்னை மாநகர முதல் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கால கட்டத்தில்தான் சென்னை மாநகரில் கட்டாய ஆரம்பக் கல்வியும், பார்வையற்றோர் பள்ளியும், பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லமும் உருவாக்கப்பட்டன என்ற வரலாற்றுச் செய்திகள் உங்களுக்குத் தெரியுமா?

26. மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கை, சட்டம் ஆவதற்கு முன், நீதிக்கட்சித் தலைவரான டாக்டர் நாயர் 1918ஆம் ஆண்டு லண்டனுக்குத் தாழ்த்தப்பட்டடோருக்கும், பார்ப்பனரல்லாதாருக்கும் சட்டமன்றத்தில் ஒதுக்கீடு தேவை என்று வற்புறுத்தச்சென்றபோது, இங்கிலாந்து அரசாங்கம் அவர் கருத்துத் தெரிவிக்கத் தடைபோட்டதும், தளர்ச்சி அடையாமல் டாக்டர் நாயர், தனித்தனியாக ஆங்கிலேயே அதிகாரிகளைச் சந்தித்து தடையை நீக்கச் செய்து இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் தனது கருத்துக்களை எடுத்துச்சொல்லிவிட்டுத்தான் சென்னை திரும்பினார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

27. நீதிகட்சித் தலைவரான டாக்டர் நாயர் உடல் நலமின்றி லண்டனுக்கு சிகிச்சைக்கு சென்றபோது - அவர் மரணமடைய வேண்டும் என்று பார்ப்பனர்கள் விஷேச அர்ச்சனை செய்தார்கள் என்ற செய்தி உங்களுக்குத் தெரியுமா?

28. கோயில்கள் பார்ப்பனர்களின் குடும்பச் சொத்தாகி கொள்ளையடிக்கப் பட்டு வந்த நிலைமையை மாற்றி, பார்ப்பனர்களின் கடும் எதிர்ப்புக்கிடையே 1925-இல் நீதிக்கட்சி ஆட்சிதான், முதலமைச்சர் பனகல் அரசரின் பெருமுயற்சியால் இந்து அறநிலையத் துறையையே உருவாக்கியது என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

29. இந்தியாவிலேயே - தாழ்த்தப்பட்டோருக்கான முதல் அமைச்சகத்தை பனகல் அரசர்தான் நீதிக்கட்சி ஆட்சி காலத்தில் உருவாக்கினார் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

30. சென்னை பிரசிடென்சி கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியாராக வேலை பார்த்த கா. நமச்சிவாயம் (முதலியார்) அவர்களுக்கு மாதச் சம்பளம் ரூ. 81 ஆகவும், அதே நேரத்தில் அக்கல்லூரியில் சமஸ்கிருதப் பேராசிரியாராக வேலைப்பார்த்த குப்புசாமி சாஸ்திரி அவர்களுக்கு மாதச் சம்பளம் ரூ. 300ஆகவும் இருந்த கொடுமையை எதிர்த்து தந்தை பெரியார் அவர்கள் எழுத - அதன் அடிப்படையில் நீதிக்கட்சி ஆட்சியில் முதலமைச்சராக இருந்த பனகல் அரசர் அந்த வேறுபாட்டை நீக்கி உத்தரவு பிறப்பித்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

31. 1916ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் மூத்த தலைவரான டாக்டர் நடேசனார் அவர்கள் திருவல்லிக்கேணி அக்பர் சாயபு தெருவில் "திராவிடர் இல்லம்" என்று பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு ஒரு விடுதியைத் துவக்கினார்!

ஏன் தெரியுமா?

தமிழ்நாடு முழுவதுமிருந்து சென்னைக்குப் படிக்க வந்த பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு அப்போது தங்குவதற்கு விடுதிகள் இல்லை; பார்ப்பனர்களே ஓட்டல்களை நடத்தியதால் அவர்கள் அங்கே உணவருந்த அனுமதிக்கப்படவில்லை!

1916ஆம் ஆண்டு வாக்கில் பார்ப்பனரல்லாதார் நிலைமை இப்படித் தான் இருந்தது என்ற உண்மை உங்களுக்குத் தெரியுமா?

33. தாழ்த்தப்பட்ட சகோதரர்களை 'பறையன்" என்றே அரசு ரிக்கார்டுகளில் குறித்து வந்ததை எதிர்த்து ஆதி திராவிடர் என்றே குறிக்கவேண்டும் என்று சென்னை மாநகராட்சியில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றி, பிறகு அதை அரசை ஏற்கச் செய்தவர் நீதிக்கட்சி தலைவரான டாக்டர் சி. நடேசனார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

34. இன்று பதவி நியமனங்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள "பப்ளிக் சர்வீஸ் கமிஷன்" பார்ப்பனர்களின் எதிர்ப்பை மீறி நீதிக்கட்சித் தலைவர் டாக்டர் நடேசனாரின் சலியாத உழைப்பால், உருவெடுத்தது என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

35. ஒரத்தநாடு, ராஜாமடம் போன்ற இடங்களில் இருந்த தர்ம சத்திரங்களில் - பார்ப்பனர்களுக்கு மட்டுமே சாப்பாடு என்ற முறையை மாற்றியவர் தஞ்சை ஜில்ல போர்டு தலைவராக இருந்த சர் ஏ.டி, பன்னீர் செல்வம்தான் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

36. 1935ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் பேருந்துகளில் "பஞ்சமருக்கு இடமில்லை" என்று எழுதியதோடு டிக்கட்களிலும் அவ்வாறு அச்சிட்டார்கள் என்பதும் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சி குழு தலைவராக இருந்த W.P.A. சவுந்தர பாண்டியன்தான் அதை ஒழித்தார் என்பதும் உங்களுக்குத் தெரியுமா?

37. முகவை மாவட்ட ஆதி திராவிடர் மாநாட்டை, சிவகங்கையில் முதன் முதலாக ஏற்பாடுசெய்து நடத்தியவர் - சுயமரியாதை வீரர் - ராமச்சந்திரன் (சேர்வை) என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

38. "இனி இந்தக் கையால் ஒரு பார்ப்பனருக்காவது உத்தியோகம் கொடுக்கமாட்டேன்" என்று மேடையில் அறிவித்தவர் தான், அறங்காவலர் குழு, தாலுகாபோர்டு தலைவராக் இருந்த எஸ். ராமசந்திரன் (சேர்வை) என்பதுஉங்களுக்குத் தெரியுமா?

39. சிவகங்கை சுயமரியாதை வீரரான இராமச்சந்திரனாரை காங்கிரசில் சேருமாறு, சத்தியமூர்த்தி (அய்யர்) வலியுறுத்திய போது, நீங்கள் பூணூலை அகற்றினால் காங்கிரசில் சேருகிறேன் என்று முகத்திலடித்தாற்போல் அவர் பதில் தந்தார் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

40. விருந்தில் - சூத்திரன் என்று சொன்னதாற்காக, ஆத்திரமடைந்து சாப்பிட்ட கையுடன் சொன்னவரை அறைந்தவர்தான் சாமி கைவல்யம் என்பதும், "சூத்திரன் என்றால் ஆத்திரம் கொண்டு அடி" என்ற பழமொழி அது முதுல்தான் வழக்கத்திற்கு வந்தது என்பதுவும் உங்களுக்குத் எதரியுமா?

41. திருச்சி மலைக்கோட்டை கோயில் பிரவேசத்துக்கு ஆதிதிராவிடர்களை அழைத்துச் சென்ற நீதிக்கட்சியின் தலைவர்கள் கே.வி. ராமநாதன், டி.வி. சுப்பிரமணியன் ஆகியோர் மலைகட்டு படிகளில் உருட்டி விடப்பட்டு - மூர்க்கமாகத் தாக்கப்பட்டனர் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

42. ஈரோடு கோயில் கர்ப்பக்கிரகத்துக்குள் உரிமைகோரி உள்ளே நுழைந்த மாயூரம் நடராசன், பட்டுக்கோட்டை அழகிரி உள்ளிட்ட கழகத் தோழர்களைப் பார்ப்பனர்கள் கோயிலுக்குள்ளே வைத்து பூட்டினர் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

43. தமிழ் நாட்டுக்கு தமிழ்நாடு என்ற பெயரே - 1969 ஆம் ஆண்டில் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் முயற்சியால் அதிகாரப்பூர்வமாகச் சூட்டப்பட்டது என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

44. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி பதவிக்கு, பார்ப்னர் திருவேங்கடாச்சாரியாரை நியமிக்கும்படி பிரதமர் நேரு கூறியும் ஏற்காமல், தமிழர் என். சோமசுந்தரத்தை நியமித்த முதல்வர் ஓமந்தூராரர்ராமசாமி (ரெட்டியாரை தாடியில்லாத ராமசாமி நாயக்கர்) என்று பார்ப்பனர்கள் பட்டங்கட்டியது உங்களுக்குத் தெரியுமா?

45. இந்தி திணிக்கப்படுவதால் - ஆபத்து ஏற்படும் என்பதை முதன் முதலாக சுட்டிக்காட்டி - 1926ஆம் ஆண்டிலேயே குரல் எழுப்பியவர் தலைவர் தந்தை பெரியார் தான் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

46. 1938 இந்தி எதிர்ப்புப்போரில் பங்கு கொண்டு சிறையிலே மரணமடைந்த மாவீரன் நடராசனை “ஒரு படிப்பு வாசனை இல்லாத அரிஜன்' என்று சட்டசபையில் சாதியைச் சொல்லி கேலி பேசியவர் ராசகோபாலாச்சாரியார் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

47. 1938 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொண்டு சிறையிலே மரணமடைந்த தாலமுத்துவின் சடலத்தை ராஜா சர் முத்தையா செட்டியாரும், முன்னாள் மேயர் பாசுதேவும் தங்கள் தோளிலே சுமந்து சென்றனர் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

48. தந்தை பெரியார் ரயில் நிலையத்தில் இந்தி எழுத்துக்களைதார் கொண்டு அழித்துப் போராட்டம் நடத்திய போது - அதற்கு எதிராக தார் மீது மண்ணெண்ணெய் ஊற்றி அழித்தவர் தான் ம.பொ.சி என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

49. 1953 ஆகஸ்டில் சேலம் ரயில் நிலைய இந்தி எழுத்துக்களை அழிக்கும் போராட்டத்துக்கு தந்தை பெரியார் சென்றபோது அங்கே சில காங்கிரசார் கலந்துகொண்டு போராட்டத்தைத் தடுக்க முயன்று தோல்வி கண்டார்கள் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

50. ரயில் நிலைய பெயர்ப் பலகைகளில் இந்தி முதலாவதாகவும், தமிழ் மூன்றாவதாகவும் இருந்த நிலை திராவிடர் கழகம் 1952, 53 54

ஆண்டுகளில் ரயில் நிலையங்களில் இந்தி எழுத்துக்களை அழித்ததனால் தமிழ் முதல் இடத்தைப் பெற்றது என்பது உங்களுக்குத் தெரியுமா?

51. ரூபாய் நோட்டுகளிலும் நாணயத்திலும் 1950ஆம் ஆண்டு இந்தி எழுத்துக்கள் மட்டுமே பொறிக்கப்பட்டதும் பிறகு தமிழகத்தில் நடந்த போராட்டத்தின் காரணமாக அகற்றப்பட்டது என்பதும் உங்களுக்குத் தெரியுமா?

52. காங்கிரஸ் கட்சி துவக்கப்பட்ட காலங்களில் அதன் மாநாடுகளில் பிரிட்டிஷ்காரர்களுக்கு விசுவாசத் தீர்மானம் போட்டு 'யூனியன் ஜாக்' கொடியும் ஏற்றப்பட்டு வந்தது என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

53. வெள்ளையர்களால் - சிறை தண்டனை விதிக்கப்பட்ட வ.உ.சி. க்காக, நீதிமன்றத்தில் வழக்காட அவரது துணைவியார் நிதி உதவி கேட்டு அறிக்கை விட்டபோது, எந்த காங்கிரசாரும் அவருக்கு உதவ முன்வரவில்லை என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

54. அகில இந்திய காங்கிரஸ் மாநாடுகளில் காலையில் இந்து மகாசபை மாநாடும், மாலையில் காங்கிரஸ் மாநாடும் ஒரே மேடையிலேயே நடத்தப்பட்டு வந்தன என்ற வரலாறு உங்களுக்குத் தெரிமா?

55. காந்தியார் சுட்டுக்கொல்லப்பட்டவுடன் இனி பார்ப்பனர்களை அமைச்சர்களாகவோ, காங்கிரஸ் தலைவராகவோ நியமிக்கக்கூடாது என்று காங்கிரஸ்காரர்களே மராட்டியத்தில் தீர்மானம் போட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

56. 1901, இந்திய சென்சஸ், சென்னை 15வது தொகுப்பில் பக்கம் 136-ல் உள்ள சமூக அந்தஸ்து வரிசையில் பார்ப்பனர், க்ஷத்திரியர், வைசியர் வரிசைக்குக் கீழே,

"Sar Sudras and good Sudras 31% (சதவிகிதம்)

(சற் சூத்திரர்களும், நல்ல சூத்திரர்களும் 31 விழுக்காடு) என்று இனம் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது என்ற கொடுமை உங்களுக்குத் தெரியுமா?

57. கோயில் கோபுரங்கள் கட்டி அதில் கடவுள் பொம்மைகளைப் பதித்து வைத்ததற்குக் காரணமே, கோயிலுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்ட சூத்திரர்களும் பஞ்சமர்களும் வீதியிலிருந்தபடியே தரிசனம் செய்வதற்குத்தான் என்கிற சாத்திரமும் வரலாறும் உங்களுக்குத் தெரியுமா?

58. 1932ஆம் ஆண்டுகளில் நெல்லை மாவட்டத்தில் 'புரதவண்ணான்' என்ற சாதியினரை பார்த்தாலே தீட்டு என்று பகல் பொழுதில் அவர்கள்

வீட்டை விட்டு வெளியே வரவே கூடாது என்று சாதிக் கட்டுப்பாடு இருந்த வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

59. 1935ஆம் ஆண்டில் கும்பகோணம் நகராட்சியில் அக்கிரகாரத்துக்குக் கக்கூஸ் எடுக்க தாழ்த்தப்பட்டவர்களை நியமிக்கக்கூடாது - அதற்குப் பதிலாக சூத்திரர்களை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மலம் எடுப்பதிலே கூட தீண்டத் தகாதவர்கள் அக்கிரகாரத்திற்குள் வரக்கூடது என்று பாடுபட்டது உங்களுக்குத் தெரியுமா?

60. கொச்சியில் மன்னர் ஆட்சி நடந்தபோது - நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்த 'கீழ் சாதி' யைச் சார்ந்தவர்கள் நீதிபதி இருக்கையிலிருந்து 64 அடி தொலைவில் நிறுத்தப்பட்டே, விசாரிக்கப்பட்டு வந்தனர் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

61. திருத்தங்கல் பகுதியில் உள்ள நாடார் சமூகத்தினர் கோவிலுக்குள் நுழையக் கூடாது. தேங்காயும் உடைக்கக்கூடாது என்று 1878ஆம் ஆண்டு திருவில்லிப்புத்தூர் மாவட்ட முன்சீப் தீர்ப்பு வழங்கினார் என்ற கொடுமை உங்களுக்குத் தெரியுமா?

62. திருவாங்கூர் மகாராணியின் முன் ஒரு தாழ்த்தப்பட்ட சாதிப் பெண் ரவிக்கை அணிந்து வந்தார் என்பதற்காக அவரது மார்பை வெட்ட திருவாங்கூர் நிர்வாகம் உத்திரவிட்டது என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

63. 1874ஆம் ஆண்டு மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு வழி பட வந்த நாடார்களை - பார்ப்னர்கள் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியதோடு - அது தொடர்பாக நடந்த வழக்கில் - நாடார்கள் கோயிலுக்குள் நுழைய உரிமை கிடையாது என்று தீர்ப்பு வழங்கப்பட்ட வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

64. வேலை கேட்டு மனுச் செய்த ஒரு நாடார் சமூகத்தைச் சார்ந்த டாக்டருக்கு தென்னங்கன்றுகளை வாங்கிக் கொடுத்து, குலத்தொழிலை செய்யச் சொன்னவர், திருவாங்கூர் சமஸ்தான திவான் சர்.சி.பி. ராமசாமி அய்யர் என்பது உங்களுக்குத் தெரியுமா?

65. 1939ஆம் ஆண்டு மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் தாழ்த்தப்பட்டோர் நுழைவுப் போராட்டம் நடந்தவுடன் கோவிலை விட்டு மீனாட்சியே ஓடிப்போய் விட்டாள் என்று பார்ப்பனர் பிரச்சாரம் செய்து கோயிலுக்குப் பூட்டு போட்டுவிட்டார்கள் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

66. 1940ஆம் ஆண்டுகளில் - சென்னை வில்லிவாக்கத்தில் - தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளில் வசித்தவர்களுக்கு வந்த கடிதங்களை - அஞ்சல்காரர்கள் ஊர் எல்லையிலேயே உள்ள ஒரு கோயிலிலே வீசி எறிந்துவிட்டுப் போனார்கள் என்ற கொடுமை உங்களுக்குத் தெரியுமா?

67. 1938ஆம் ஆண்டு நீடாமங்கலத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் மூன்று ஆதிதிராவிட தோழர்கள் சரிசமமாக உட்கார்ந்து விருந்து சாப்பிட்டார்கள் என்பதற்காக அவர்களை மொட்டை அடித்து மரத்தில் கட்டி வைத்து அடித்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

68. 37 ஆண்டுகால சுதந்திரத்திலும் இன்று சுப்ரீம் கோர்ட்டில் ஒரே ஒரு நீதிபதிதான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

69. இந்தியாவில் பார்ப்பன ஆதிக்கம் நடப்பதை - 1926 ஆம் ஆண்டு கண்டித்து எழுதிய ஒரு பம்பாய் பத்திரிகை மீது பார்ப்பனர்கள் வழக்கு போட்டார்கள்; அதை எதிர்த்து பத்திரிக்கையாளரின் சார்பில் டாக்டர் அம்பேத்காரே வாதாடி வெற்றி பெற்றார் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

70. "விவேகானந்தர் ஒரு பார்ப்பனரல்லாத மதத் தலைவர்" என்பதால் - அவர் வெளிநாடு சென்று பிரச்சாரம் செய்ய பார்ப்பனர்கள் முட்டுக்கட்டை போட்டார்கள் என்பதும், பிறகு ராமநாதபுரம் சேதுபதி உதவியால் அவர் சிக்காக்கோ போனார் என்பதும் உங்களுக்குத் தெரியுமா?

71. 1921ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் - இரண்டு பார்ப்பனர் விவசாய வேலை செய்தார்கள் என்பதற்காக, அவர்கள் சாதி நீக்கம் செய்யப்பட்டார்கள் என்பதும், இதற்கு சங்கராச்சாரியும் உடந்தை என்பதும் உங்களுக்குத் தெரியுமா?

72. "தீக் குறளை சென்றோதோம்" என்ற ஆண்டாளின் திருப்பாவை பாட்டுக்கு - "திருவள்ளுவரின் தீய திருக்குறளை ஓதமாட்டோம்" என்பதே அர்த்தம் என்று பேசியவர் தான் காஞ்சி சங்கராச்சாரியார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

73. பெண்களின் திருமண வயது குறைந்தது 14 ஆக இருக்கவேண்டும் என்று சென்னை சட்டசபையில் 1925ஆம் ஆண்டு மசோதா கொண்டு வரப்பட்டபோது, 'திவான் பகதூர்' டி. ரங்காசாரி உட்பட பல பார்ப்பனர்கள் அதைக் கடுமையாக எதிர்த்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

74. மனைவியை அடித்து, கையை உடைத்த கணவன் மீது உயர் நீதிமன்றத்தில் வழக்கு வந்தபோது - விசாரனை செய்த நீதிபதி முத்துசாமி அய்யர், மனுதர்மப்படி மனைவியை அடிப்பது குற்றமல்ல என்று தீர்ப்பளித்த வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

75. நாடார் சமூகப் பெண்கள் மேலாடை அணியக்கூடாது என்று 1829 ஆம் ஆண்டு திருவிதாங்கூர் அரசாங்கமே உத்திரவிட்டது என்ற கொடுமையான வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

76. எப்போதோ ஒரு முறை சில பார்ப்பனர்கள் வருண ஜெபம் செய்ததால்தான் மிலட்டூர் என்ற கிராமத்தில் மழைப் பெய்தது என்று கூறி இந்தக் கிராமமே பார்ப்பனர்களுக்கு இனாமாக வழங்கப் பட்டது என்ற கொடுமை உங்களுக்குத் தெரியுமா?

77. வைணவர்களிலே - வடகலைநாமம் - தென்கலை நாமம் போட்டவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து விட்டால் - அதற்காக உடனே போய் சுவரில் போய் முட்டிக் கொள்ளும் வழக்கம் இந்து மதத்திலே இருந்தது என்பது உங்களுக்குத் தெரியுமா?

78. 1892இல் கடப்பை மாவட்டத்தில் பெரும் பதவியில் இருந்த கிருஷ்ணராவ் என்ற பார்ப்பன அதிகாரி தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, தன்னுடைய 116 உறவினர்களுக்கு வேலை தந்தார் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

79. திருவாங்கூர் சமஸ்தான திவானாக இருந்த சர் சி.பி. ராமசாமி அய்யர், திருவாங்கூரை இந்தியாவோடு சேர்ப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தவர் என்பது உங்களுக்குத் தெரியமா?

80. வாரன்ஹேஸ்டிங் கவர்னர் ஜெனரலாக இருந்த காலத்தில் பல வங்கிகளில் கோடிக்கணக்கான ரூபாய்க் கையாடல் செய்த நந்தகுமார் என்ற பார்ப்பனருக்கு, தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது என்பதும், அதை எதிர்த்து பார்ப்பனர்கள் போராட்டம் நடத்தினார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியுமா?

81. குலத்தொழிலைச் செய்ய வேண்டிய கீழ் சாதிகாரர்கள் சட்டசபைக்குப் போட்டியிடக் கூடாது என்று பகிரங்கமாக பேசியவர் தான் “தேசிய திலகம்” கோபாலகிருஷ்ண கோகலே என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

82. எட்டயபுரத்தில் நடந்த பாரதி விழா ஒன்றில் மேடையில் நாற்காலியில்

ஆச்சாரியர், எம்.எஸ். சுப்புலட்சுமி, சதாசிவம் அய்யர் ஆகியோர் அமர்ந்து கொண்டு முதலமைச்சராக இருந்த ஓமந்தூராரையும் டாக்டர் சுப்பராயனையும் தரையில் பாய் போட்டு உட்கார வைத்தார்கள் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா ?

83. வடலூர் ராமலிங்க அடிகளாரை தீயில் தள்ளி கொலை செய்துவிட்டு, ஜோதியில் கலந்துவிட்டார் என்று பார்ப்பனர்கள் கதை கட்டி விட்டதைத் தொடர்ந்து, அன்றைய பிரிட்டிஷ் ஆட்சி கொலை வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தியது என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

84. "பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் வழக்குகளை விசாரிக்கும் ஆங்கிலேயே நீதிபதிகளுக்கு உதவியாக-சாஸ்திரங்களை எடுத்துச் சொல்லும் பொறுப்பில் பார்ப்பனர்களே இருந்தார்கள் என்பதும், அந்தப் பார்ப்பனர்கள் தங்கள் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப-கருத்துகளைக் கூறி வந்தார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியுமா?"

85. காலம் காலமாக தமிழர்கள் மட்டுமே அர்ச்சகர்களாக பணியாற்றி வந்த பழனி முருகன் கோயிலில்-பார்ப்பனர்கள் நுழைந்து தமிழர்களே அர்ச்சகராக முடியாத நிலையை உருவாக்கி விட்டனர் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா ?

86. சென்னை கீழ்ப்பாக்கம் மனநோய் மருத்துவமனையில் கூட பார்ப்பன மனநோயாளிக்குத் தனிப்பிரிவு இருந்து வந்தது என்பது உங்களுக்குத் தெரியுமா ?

87. 1943லும் குடத்தை அரசினர் கல்லூரியில், பார்ப்பன மாணவர்களுக்குத் தனியாகவும், பார்ப்பனரல்லாத மாணவர்களுக்குத் தனியாகவும் குடி தண்ணீர் பானைகள் வைக்கப்பட்டிருந்த கொடுமை உங்களுக்குத் தெரியுமா?

88. 50 ஆண்டுகட்கு முன்பு - ரயில்வே துறைநடத்திய சிற்றுண்டி விடுதிகளில் கூட பார்ப்பனருக்கும் - பார்ப்பனரால்லதாருக்கும் தனித்தனியே இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன என்பது உங்களுக்குத் தெரியுமா?

89. 1937-ல் தென்காசியில் தேவாரம் படித்த பிறகு பிரசாதம் வாங்குவது தங்களுக்கு அவமானம் என்று கூறி பார்ப்பனர்கள் கோயிலை விட்டு வெளியேறியதோடு சாமி புறப்படும் போது தங்களை மட்டும் உள்ளே வைத்து தேவார ஓதுவார்களை உள்ளே விடாமல் கதவைப் பூட்டிக் கொண்டார்கள் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

90. திருவையாறு தியாகராயர் விழாவில் தண்டபாணி தேசிகர் தமிழ்ப் பாட்டுப் பாடினார் என்பதற்காக - மேடை தீட்டாகி விட்டது என்று பார்ப்பனர்கள் தீட்டுக் கழித்தார்கள் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

91. 1898 முதல் 1930 வரை சென்னை உயர்நீதிமன்றத்தில் நியமிக்கப்ப பெற்ற 9 "இந்தியா" நீதிபதிகளில் 8 பேர் பார்ப்பனர்; ஒருவர் நாயர். தமிழர் ஒருவர் கூட இல்லை என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

92. சென்னை உயர்நீதிமன்றத்தில் 1948ஆம் ஆண்டுதான் முதன் முதலில் என். சோமசுந்தரம் என்ற பார்ப்பனரல்லாத நீதிபதி. பார்ப்பனர்களின் கடும் எதிர்ப்பை மீறி நியமிக்கப்பட்டார் என்பதும், அதற்கு முன் பார்ப்பனரல்லாத நீதிபதியே உயர்நீதிமன்றத்தில் கிடையாது என்பது உங்களுக்குத் தெரியுமா?

93. புளியங்குடியில் - ஒரு பார்ப்பனர் மீது வந்த கொலை வழக்கை விசாரித்த நீதிபதி "பிராமணன் கொலை செய்திருக்கமாட்டான்" என்று சாட்சிகளைப் பார்க்காமல் இனத்தை மட்டுமே பார்த்து தீர்ப்பளித்தார் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

94. 1929-ல் உத்தபாளையம் வட்டம் சீலையம்பட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து கோர்ட் உறுப்பினர்களே, பார்ப்பனர்களுக்கு சரி சமமாக உட்கார தடை விதிக்கப்பட்டனர் என்பது உங்களுக்குத் தெரியுமா?

95. பார்ப்பன புரோகிதர்கள் இந்நாட்டை ஆண்ட மன்னர்களிடமிருந்து தானமாகப் பெற்ற கிராமங்கள் சுமார் 2,840 என்பதும், அவைகளுக்கு "சதுர்வேதி மங்கலங்கள்" என்று பெயர் சூட்டப்பட்டது என்பதும் உங்களுக்குத் தெரியுமா?

96. தஞ்சை மன்னனை க்ஷத்திரியன் என்று புகழ்ந்து சொத்துசுகங்களைக் குவித்துக் கொண்ட பார்ப்பனர்கள், மன்னரின் சொத்துக்களை பிரிட்டிஷ் அரசாங்கம் எடுத்துக்கொண்ட போது, பிராமணன் சூத்திரன் என்ற இரு பிரிவு மட்டுமே தான் உண்டு என்று நீதிமன்றத்திலே சாட்சியமளித்தார்கள் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

97. 1936-37இல் ஆட்சிக்கு வந்த இராசகோபாலாச்சாரியார் போதிய நிதி வசதியில்லை என்று காரணங் கூறி கிராமப் புறத்தில் இருந்த 2,200 துவக்கப் பள்ளிகளை இழுத்து மூடிய அதேநேரத்தில், பார்ப்பனர்களுக்காக ரூ. 12 லட்சம் செலவில் வேத பாடசாலையைத் துவக்கினார் என்ற செய்தி உங்களுக்குத் தெரியுமா?

98. 1952-ல் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்தது. எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பதவி ஆசை காட்டி இழுத்து - ஆச்சாரியார் கொல்லைப்புற வழியிலுள்ளே நுழைந்து காங்கிரஸ் அமைச்சரவை அமைத்தன் மூலம் - கட்சி மாறலுக்கு முதன்முதலாக வழிகாட்டியவர் ஆச்சாரியாரே என்பதும் உங்களுக்குத் தெரியுமா?

99. 1952-ல் திருவான்மியூரில் நடந்த சலவைத் தொழிலாளர் மாநாட்டில் பேசிய அன்றைய முதலமைச்சர் ராஜகோபாலச்சாரியார் அவரவர் குலத்தொழிலைத்தான் அவரவர் செய்யவேண்டும்; படிக்கக் கூடாது என்று பகிரங்கமாகப் பேசினார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

100. 1952-ல் குலக்கல்வி திட்டத்தை ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு கொண்டுவந்த ராஜகோபாலாச்சாரியார் அந்த சிறுவர்கள் சாதித்தொழிலைச் செய்கிறார்களா என்பதைக் கண்காணிக்குமாறு கல்வி அதிகாரிகளுக்கு உத்திரவு போட்டார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

101. ஆச்சாரியார் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பட்ட ஆரம்பப்பள்ளிப் பாடநூல்களில் - அந்த சாதிக்காரர்களின் குலத்தொழிலை படத்தோடு போட்டு - ஒருமையில் எழுதி அவமதித்தார் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

102. ஆச்சாரியார் உள்நாட்டு அமைச்சராக இருந்த போது பெங்களூர் ராஜு என்ற பார்ப்பன கொலைக் குற்றவாளியை அன்றைய சபாநாயகர் அனந்தசயன அய்யங்காரைப் பயன்படுத்தி கொலைக் குற்றத்திலிருந்து விடுவித்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

103. தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலிருந்து திறமையான மாணவர்களைத் தேர்ந்தெடுத்து வெளிநாட்டுக்குப் படிக்க அனுப்பும் திட்டத்தை, உத்தரவு போட்டு ஒழித்தவர் ராஜகோபாலாச்சாரியார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

104. கோவிலுக்கு பெண்களை பொட்டு கட்டிவிடும் தேவதாசி அடிமை முறையை ஒழிக்கும் மசோதா வந்தபோது அதை மேலவையில் கடுமையாக எதிர்த்துப் பேசியவர் - பிரபல தேசிய தலைவர் சத்தியமூர்த்தி அய்யர்!

தந்தை பெரியாருடன் இதுபற்றி ஆலோசனை கலந்து பிறகு அந்த எதிர்ப்புக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி பதிலடி கொடுத்தார்!

தேவதாசி முறை நீடிக்க வேண்டும் என்று அய்யர் விரும்பினால் இனிமேல் அவர் இனத்துப் பெண்கள் அதைச் செய்யட்டும் என்று முத்துலட்சுமி பதிலடி கொடுத்த பிறகு தான், சத்தியமூர்த்தி வாய்மூடினார் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

105. "சுதந்திரப் போராட்டத்தில் சிறைக்குப் போன சத்தியமூர்த்தி அய்யர் - தண்டனை காலம் முடிவதற்கு முன்பே விடுதலை பெற - நீதிக்கட்சி தலைவர் களிடம் சிபாரிசுக்கு மன்றாடினார் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?"

106. "சென்னையில் - ராயப்பேட்டை காங்கிரஸ் கமிட்டி கூட்ட வாயிலில் வ.உ.சி. சிலை வைக்க முயற்சி நடந்தபோது அவரை வகுப்பு வாதி என்று கூறி சிலை வைக்க எதிர்ப்பு தெரிவித்தவர் சத்தியமூர்த்தி அய்யர் என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

107. 1927-ல் சிதம்பரத்துக்கு காந்தியார் வந்த போது - ஆதிதிராவிடர்களை உள்ளே அழைத்துச் சென்று விடாமடல் தடுக்க தீட்சிதப் பார்ப்பனர்கள் கோயிலின் நான்கு கதவுகளையும் இழுத்து மூடிவிட்டனர். கோயிலுக்குள் இருந்த பக்தர்கள் அன்று முழுவதும் உள்ளேயே அடைப்பட்டுக் கிடந்தனர் என்பது உங்களுக்குத் தெரியுமா?

108. இளைஞர்கள் பொதுவுடைமைக் கொள்கைகளின் பக்கம் ஈர்க்கப்படாமல் இருப்பதற்காகவே, தாம் உப்பு சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தொடங்கியதாக காந்தியார் கூறினார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

109. பொதுக் கோயில்களில் தாழ்த்தப்பட்டோர் நுழைந்து வழி படக் கூடாது; அவர்கள் வழிபடுவதற்கென்றே தனியாகக் கோயில்கள் கட்டப்படவேண்டும் என்று காந்தியார் எழுதியதையும், பேசியதையும் கண்டித்து 1929 நவம்பர் 26 'ஜஸ்டிஸ்' ஆங்கில நாளேடு தான் தனிக்கட்டுரை வெளியிட்டது என்பது உங்களுக்குத் தெரியுமா?

110. காந்தியாரைச் சுட்டுக்கொன்ற கோட்சே - ஒரு பார்ப்பனன் என்ற செய்தியை தமிழ்நாட்டுப் பார்ப்பன ஏடுகள் திட்டமிட்டு இருட்டடிப்பு செய்து செய்திகள் வெளியிட்டன என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

111. காந்தியாரை சுட்டுக்கொன்றே கோட்சே பார்ப்பனன் - தனது படுகொலைக்கு ஆதரவாக கிருஷ்ணனின் கீதை உபதேசத்தை நீதி மன்றத்தில் எடுத்துக்காட்டினான் என்பது உங்களுக்குத் தெரியுமா?

112. புதுடில்லியில் காமராசரை அவர் தங்கியிருந்த வீட்டில் வைத்து - உயிரோடு கொளுத்தத் திட்டம் போட்டது ஆர்.எஸ்.எஸ். என்ற வரலாறு உங்களுக்குத் தெரியுமா?

113. இந்தியாவின் முதல் பெண் வெளியீட்டாளர் உலகின் முதல் நாத்திக இதழின் பதிப்பாளர் அன்னை ஈ.வெ.ரா. நாகம்மையார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

114. "இந்திய அரசியல் சட்டத்தை நான் எழுதியதாகச் சொல்லுகிறார்கள் இப்போது சொல்லுகிறேன் அந்த சட்டத்தை தீ வைத்து கொளுத்த நான் முதல் ஆளாக இருக்கிறேன்" என்று அண்ணல் அம்பேத்கார் கூறினார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

நன்றி : விடுதலை

வெளியீடு :

திராவிடர் கழகம்

தலைமை நிலையம்

திருவள்ளுவர் பேருந்து நிலையம் அருகில்

கோவை - 641 044.